<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No. 98/2018 Date: 18.07.2023

PW-1-சரவணன்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதிகளும், பிரதிவாதிகளும் செம்பாகவுண்டரின் வாரிசுகள். அவர் உயிருடன் இல்லை. அவருக்கு 2 மகன்கள், 1 மகள். வெங்கடாசலம் எனக்கு பெரியப்பா. தங்கவேல் எனக்கு அப்பா. அவர் உயிருடன் இல்லை. 2 ம் வாதி என்னுடைய சகோதரி, 3 ம் வாதி என்னுடைய தாயார். தங்கவேல் சகோதரி குஞ்சம்மாள் இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் உயிருடன் உள்ளார்கள். சண்முகம் 1 ம் பிரதிவாதியின் மகன். 1 ம் பிரதிவாதிக்கு சரசு என்ற மகள் உள்ளார். அவரை இத்தாவாவில் சேர்க்கவில்லை. 3, 4 பிரதிவாதிகள் 2 ம் பிரதிவாதிகளின் மகன்கள். தாவா பரிகாரம் பற்றி தெரியும். நாங்கள் 1/2 பங்கு கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளோம். 1 வது அயிட்ட சொத்தில் உள்ள பொது கிணற்றை பொறுத்து நிரந்தர உறுத்துகட்டளை கேட்டுள்ளோம். செம்பாகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தாவா சொத்துக்கள் இல்லாமல் வேறு சொத்துகளும் உள்ளது. அவை வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு அனுபவித்து வருகிறோம். அதில் எனது பாகத்தில் நானும், சண்முகம் பாகத்தில் அவரும் வீடு கட்டியுள்ளோம். தாவா சொத்துக்கள் என் அப்பாவும் 1 ம் பிரதிவாதியும் கூட்டாக கிரையம் வாங்கிய சொத்துக்கள். 1 முதல் 4 அயிட்டம் நிலம், 5 வது அயிட்டம் தடம். 5 வது அயிட்ட தடத்தில் பச்சியண்ணன் என்பவருக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். அவரையும் தாவாவில் சேர்க்கவில்லை. தாவா சொத்து இல்லாமல் என் அப்பாவும் 1 ம் பிரதிவாதியும் கூட்டாக வாங்கிய வேறு சொத்து உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-சரவணன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.